தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். எனவே, தனியார் தொழில்முனைவோர் எவரேனும் முந்திரி தொழிற்சாலை தொடங்க முன்வந்தால், அதற்கு உதவி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் தனியார் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. குறிப்பாக, 2021–2022 ஆம் ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மூலமாகப் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2 நிறுவனங்களும், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமும், பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமும் என மேற்கண்ட 3 திட்டங்களின்கீழ் தொடங்கப்பட்ட 4 முந்திரி ஆலைகளுக்கு ரூ.8,06,000/– மானியத்துடன் ரூ.19,96,000/– திட்ட மதிப்பிலான கடன் வழங்கப்பட்டு, தொழில்கள் நடைபெற்று வருகின்றன. தனியார் தொழில்முனைவோர் யாரேனும் தொழில் தொடங்குவதற்கு முன்வந்தால், இந்தத் துறையின் சார்பில் கடனுதவி வழங்கி, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி, அவர்கள் தொழில் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

59—

மீன்பிடித் துறைமுகம்

***14301—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதி, இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பகுதியில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பது தொடர்பாக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரர், இளைஞரணியின் அமைப்புச் செயலாளர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், மீன் உற்பத்தியில் தமிழகத்தில் முதலிடத்தை வகிக்கக்கூடிய மாவட்டமாகும். 1964 ஆம் ஆண்டு 90 மீட்டர் நீளத்திற்கு ஒரு jetty பாலம் அமைக்கப்பட்டது. இராமேஸ்வரம் பகுதியைச் சார்ந்த ஏறத்தாழ 900–க்கும் மேற்பட்ட விசைப் படகு மீனவர்களும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப் படகு மீனவர்களும் அந்த jetty பாலத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

முற்பகல் 10–35

1964 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அந்தப் பாலம் 90 மீட்டர் நீளம் உடையது. அதில், 60 மீட்டர் நீளம் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டு தற்போது மீனவ மக்கள் 30 மீட்டர் நீளம் மட்டும்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, புதிய துறைமுகம் அமைத்துக் கொடுத்தால், மீன் உற்பத்தியில் முதல் மாவட்டமாக இருக்கக்கூடிய இராமநாதபுரத்திற்கு மேலும் வலுசேர்க்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு

2022 ஏப்ரல் 6]

அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பகுதியில் 789 விசைப் படகுகள் மற்றும் 1,018 நாட்டுப் படகுகளில் சுமார் 11,000 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்தப் படகுகள் அனைத்தும் இராமேஸ்வரம் மற்றும் தங்கச்சிமடத்திலுள்ள* T–jetty*–களைத் தங்குதளங்களாகக் கொண்டு மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன. இதில் இராமேஸ்வரத்திலுள்ள* T–jetty *50 ஆண்டு பழமையான ஒன்றாகும். இது மிகவும் பழுதடைந்துள்ளது. இதை மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களோடு நானும் நேரில் சென்று ஆய்வு செய்தேன். இந்தப் பகுதி மீனவர்களின் கோரிக்கைகளை ஏற்று,* T–jetty*–யை ரூ.23 கோடியில் புனரமைப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், அரசாணை எண் 46, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, நாள் 24–1–2022 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, பணியாணை வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கச்சிமடம் பகுதி என்பது குறிப்பாக, 12,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய பகுதியாகும். அதில் 11,000–க்கும் மேற்பட்ட மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கே இருக்கக்கூடிய அந்த* jetty *பாலம் என்பது, குறிப்பாக மீன்பிடி* season *காலத்தில் பிற மாவட்டங்களிலிருந்தெல்லாம்*

தங்கச்சிமடம் பகுதிக்கு மீன்பிடிக்க வருகின்ற காரணத்தினால், இயற்கைச் சீற்றங்களினால் கடலரிப்பு ஏற்படுகின்றபோது, மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே, அங்கே தூண்டில் வளைவு அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் மீனவர்கள் தங்களின் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய மீன்பிடித் துறைமுகம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியாக அறிவித்திருக்கின்றார்கள். அதன்படி இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்து, அரசாணை எண் 319, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, நாள் 13–12–2021–ன் வாயிலாக நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதுபோல, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பகுதியில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பது தொடர்பாக பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, விரிவான தொழில்நுட்ப; பொருளாதார சாத்தியக்கூறுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையைப் பெற்று, இராமேஸ்வரத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக மக்களின் முதல்வர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தருவைக்குளம் கிராமத்தில் மீன்பிடி இறங்குதளம் 'T' பாலத்தில் 26 படகுகள் மட்டுமே கரையில் நிறுத்தப்படுகின்றன.

2022 ஏப்ரல் 6]

தருவைக்குளம் துறைமுகத்தில் 250 விசைப் படகுகளும், 170 நாட்டுப் படகுகளும் உள்ளன. 10,000 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து வருகின்றன. அப்பகுதி மக்களின் நலன் கருதி, புதியதாக 200 மீட்டர் நீளமும், 200 மீட்டர் அகலமும் கொண்ட மீன்பிடி இறங்குதளம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும், தற்போதுள்ள மீன்பிடி இறங்குதளம் 'T' பாலம் ஆழம் குறைவாக உள்ளதால், அதையும் ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருவைக்குளம் பகுதி என்பது பல்வேறு வகைகளிலே மீன்பிடிப்புக்கேற்ற மீனவர் பகுதியாக அமைந்திருக்கிறது. ஏற்கெனவே அதை விரிவாக்கம் செய்வதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அதையும் மீன்பிடித் துறைமுகமாக மாற்றி, அங்கே அதிகமான விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகுகள் ஆகிவற்றை நிறுத்துவதற்கான வழிவகைகளைக் காணுகின்ற வகையிலே ஏற்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.*

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'T' பாலம் ஆழப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதையும் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தக் கடல் பகுதியை ஆழப்படுத்தித் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதியில் சுமார் 30,000 மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலான கடற்கரையோரப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைந்துவிட்டதால், மீன்வளம் குறைந்து வருகிறது. ஆகவே, அந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக, அங்கே மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு கிராமத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, ஆலோசனை வழங்கும் பணிக்கு ரூ.1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் தகுதிவாய்ந்த நிறுவனத்தை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வறிக்கையின் அடிப்படையில், திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு கிராமத்தில் புதிய துறைமுகம் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை 7–7–2021 அன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்தோம். பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தில் நிரந்தரமாக மீன்பிடிப் படகுகள் வந்து செல்வதற்கு ஏற்றவாறு, தூர்வாரி, கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அன்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. இம்முகத்துவாரத்தை நிலைப்படுத்துவதற்காக கருங்கல் சுவர் அமைத்து, ஆழப்படுத்துகின்ற வகையிலே, ரூ.26.85 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள்

2022 ஏப்ரல் 6]

நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இப்பணிக்கு வனத் துறையின் அனுமதி வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், அந்தப் பணிகள் உடனடியாகத் துவங்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது சிதம்பரம் தொகுதியில் 20–க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. அங்குள்ள மக்கள் மீன்பிடித் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். எனவே, அந்த மக்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு, புதுப்பேட்டை அல்லது புதுக்குப்பத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சிதம்பரம் பகுதியில் ஆய்வுகள் செய்து, மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்குமெனில், உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*